**சுங்க உத்தியோகத்தர்களது வெகுமதி நிதியம் - 2015**

சுங்க உத்தியோகத்தர்களது வெகுமதி நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. திணைக்களத்தின் வருடாந்த அறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்தாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சுங்க உத்தியோகத்தர்களது வெகுமதி நிதியத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றினை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ஒரு உத்தியோகத்தருக்காக 2008 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்த ரூபா 85,000,000 இற்கு மேற்பட்ட வெகுமதி தொகைக்கு எதிராக கிடைக்கப்பெற்றிருந்த பொது மக்களின் முறைப்பாடொன்று தொடர்பாகவும் மேலும் 5 உத்தியோகத்தர்களுக்கு 2015 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்த ரூபா 90,389,735 இற்கு மேற்பட்ட வெகுமதி தொகை கொடுப்பனவு தொடர்பாகவும் மேலதிகமாக பரிசோதனைக்காக கோரப்பட்ட சம்பவ கோவைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

#### 2.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தின் நடவடிக்கைகளுக்காக திறைசேரியினால் பேணிச் செல்லப்பட்டிருந்த புத்தகங்கள் மற்றும் திணைக்களத்தினால் பேணிச் செல்லப்பட்டிருந்த புத்தகங்களுக்கு இடையே 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 9,529,435 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) வெகுமதி நிதிய கொடுப்பனவிற்கான 118 ஆம் இலக்க திணைக்கள உள்ளகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் அந் நிதியத்தின் 03 உப நிதியங்களுக்கு மீளாய்வாண்டினுள் செலவு வைக்கப்பட வேண்டியதாக காணப்பட்ட பணம் மற்றும் உள்ளவாறாக செலவு வைக்கப்பட்டிருந்த பணத்திற்கிடையே ரூபா 868,786 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(இ) 2015 திசெம்பர் 31 இல் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் குழாம் உத்தியோகத்தர்களுக்கு செலுத்த வேண்டிய வெகுமதி பெறுமதியாக ரூபா 135,238,202 காண்பிக்கப்பட்ட போதிலும், அதற்காக ரூபா 134,340,019 தொகை அட்டுறுவாக இருந்தமையால் ரூபா 898,183 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் உத்தியோகத்தர்களினால் பெற்றுக்கொள்ளப்படாத ரூபா 43,900,183 கூட்டுத்தொகையான வெகுமதிப்பணம் பல வருடங்களாக திரண்டு காணப்பட்டிருந்த போதிலும் அப் பணத்தை முறையாக தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய PF/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4.1 (இ) இன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டில் நச்சுப் போதைப் பொருள் நிதியத்தின் கொடுப்பனவிற்காக நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்படாதிருந்த போதிலும், மீளாய்வாண்டில் அந்நிதியத்திலிருந்து ரூபா 34,400,000 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 63,330,362 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 36,526,769 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் 26,803,593 ஆல் அதாவது 73 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் மொத்த செலவினம் ரூபா 223,450,785 ஆல் அல்லது 16.75 சதவீதத்தினால் அதிகரித்திருந்த போதிலும் மொத்த வருமானம் ரூபா 250,254,378 ஆல் அல்லது 18.26 சதவீதத்தால் அதிகரித்தமையால் நிதி விளைவுகளில் அதிகரிப்பொன்று ஏற்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சுங்க கட்டளை சட்டத்தின் 153 (2) (ஆ) பிரகாரம் வெவ்வேறு சுங்க தவறுகளுக்காக விதிக்கப்படுகின்ற தண்டப் பணம் மற்றும் அரசுடைமையாக்கப்பட்ட பொருட்களின் விற்பனை மூலம் கிடைக்கும் பணம் ஆகியவற்றில் 50 சதவீதத்திற்கு சமனான தொகை சுங்க உத்தியோகத்தர்களின் வெகுமதி நிதியத்திற்கு செலவு வைக்கப்படுவதுடன் சுங்க வரி மோசடி வெளிப்படுத்தப்படல், கட்டுப்படுத்தல், மற்றும் தவிர்த்தல் போன்ற நோக்கங்களை முன்னுரிமையாக கொண்டு இந்நிதியம் தாபிக்கப்பட்டிருந்தது.

கடந்த சில வருடங்களின் தரவுகளைப் பரீட்சித்த போது சுங்க வரி மோசடிகளைக் கருத்திற் கொள்ளக் கூடியளவில் கட்டுப்படுத்தவோ அல்லது குறைக்கவோ சுங்க வெகுமதி முறைமை மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பது கேள்விக்குரியதாக இருந்தது.

(ஆ) முன்னைய 05 ஆண்டு காலப்பகுதியில் நடாத்தப்பட்ட சுங்கப் புலனாய்வுகளின் எண்ணிக்கை மற்றும் வெகுமதி கொடுப்பனவு என்பவற்றிக்காக நிதியத்திற்கு ஒதுக்கப்பட்ட பணத்தின் பெறுமதி தொடர்பான சில விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| ஆண்டு | புலனாய்வுகளின் எண்ணிக்கை | நிதியத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை |
|---|---|---|
| | | ரூபா |
| 2011 | 128 | 737,048,629 |
| 2012 | 183 | 950,983,391 |
| 2013 | 200 | 1,447,375,243 |
| 2014 | 258 | 1,323,251,133 |
| 2015 | 296 | 1,545,350,576 |

மேற்படி தரவுகளை பரீட்சிக்கும் போது வருடாந்தம் சுங்க மோசடிகளில் அதிகரிப்பொன்று இடம் பெற்றிருந்தமையும், வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள சுங்கப் புலனாய்வுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையும் உத்தியோகத்தர்களுக்கும் ஒற்றர்களுக்கும் செலுத்தப்படுகின்ற வெகுமதி தொகைகளின் நிதிசார் பெறுமதி விரைவாக அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் நிதியத்தின் நோக்கத்தை

நிறைவேற்றுவதற்காக இம் முன்மொழிவு முறைமையினை காலரீதியில் திருத்தம் செய்வதன் தேவைப்பாடு அவதானிக்கப்பட்டது.

(இ) சுங்க தவறுகளுக்காக தண்டம் விதிக்கும் போது அரசிற்கு இழக்கப்பட்ட வரி வருமானமும் அத் தண்டத்தின் பகுதியாக கருதிய காரணத்தினால் உத்தியோகத்தர்களுக்கு செலுத்தும் வெகுமதி நிதிப் பணத்தின் பெறுமதி அதிகரித்துச் சென்றதுடன் இந் நிதியத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகையின் பெறுமதியும் அதிகரித்துச் சென்றமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) சுங்க கட்டளைச் சட்டத்தின் 153 (2) (ஆ) பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள திணைக்கள கட்டளை இலக்கம் 118 இன் மூலம் உத்தியோகத்தர்களுக்கும் ஒற்றர்களுக்கும் இடையே வெகுமதி தொகை பகிர்ந்தளிக்கப்படும் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், 2012, 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 822,569,372 ரூபா 1,268,050,168, ரூபா 1,142,901,944 மற்றும் ரூபா 1,355,988,378 எனுமாறு ரூபா 4,589,509,862 கூட்டுத்தொகை ஒற்றர்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் இடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. இதில் ரூபா 4,099,362,874 அல்லது 89.32 சதவீதம் உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது.

(உ) தற்போது நிலவும் திறந்த பொருளாதார கொள்கை காரணமாக இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதியிலும் ஏற்பட்டுள்ள பிணைப்புக்களுக்கு பொருந்தும் வகையில் சுங்க கட்டளைச் சட்டம் உட்பட இந் நிதியங்களின் சட்ட ஏற்பாடுகளில் முறையாகவும் காலரீதியாகவும் திருத்தங்கள் இடம்பெற்றிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டில் நிதியத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள பணம் ரூபா 1,545 மில்லியனாக இருந்த போதிலும் ரூபா 1,590 மில்லியன் வெகுமதியாக செலுத்தப்பட்டுள்ளது. வேறுபாடான ரூபா 45 மில்லியன் தொகை வெகுமதி நிதியத்தில் இரண்டு உப நிதியங்கள் மூலம் செலுத்தப்பட்டிருந்தது.

(எ) சுங்க வெகுமதி நிதியத்திலிருந்து 1 சதவீதம் ஒதுக்கப்பட்டு நச்சுப் போதைப் பொருள் நிதியத்திற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 15,491,105 செலவு வைக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது போதைப் பொருள் நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர்களுக்காக ரூபா 34,400,000 செலுத்தப்பட்டிருந்தது. அது முன்னைய ஆண்டின் செலவினமான ரூபா 7,624,452 தொகையுடன் ஒப்பிடும் போது ரூபா 26,775,548 ஆல் அல்லது 351 சதவீத அதிகரிப்பொன்றாகும். அதன் பிரகாரம் போதைப் பொருள் புலனாய்விற்காக வெகுமதி நிதியத்திலிருந்து ஒதுக்கப்படும் பெறுமதியை அதிகரிக்கும் தேவைப்பாடொன்று அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டினுள் 12 நச்சுபோதைப் பொருள் சுற்றி வளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதன் மூலம் நச்சுப் போதைப் பொருள் கட்டுப்பாட்டிற்காக கருத்திற் கொள்ளக் கூடிய பின்னணியொன்று கிடைத்துள்ளதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஏ) சுங்க உத்தியோகத்தர்களின் வெகுமதி நிதியத்திற்கு சேகரிக்கப்படும் வருமானத்தில் 1.485 சதவீதம் செலவு வைக்கப்படும் எரிபொருள் நிதியத்திற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 45,112,577 செலவு வைக்கப்பட்டிருந்தது. அந் நிதியம் ஸ்தாபிக்கப்பட்டதன் நோக்கமாக சுங்க புலனாய்விற்கு தேவையான எரிபொருள் செலவினத்தை மீள் நிரப்புவது என அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் அந் நிதியத்திலிருந்து எவ்வித செலவினமும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்தோடு சுங்க புலனாய்வு நடவடிக்கைகளிலிருந்து கிடைக்கும் வருமானத்தை வெகுமதி நிதியத்திற்கு செலவு வைத்து வெகுமதி பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அப் புலனாய்வு நடவடிக்கைகளுக்காக செலவிட்ட எரிபொருள் கிரயம் திணைக்களத்தின் பொது செலவினத் தலைப்பின் கீழ் செய்யப்பட்டிருந்தது.

(ஐ) வெகுமதி நிதியத்தின் உப நிதியமொன்றான 2.5 சதவீதம் வெகுமதி நிதியத்திற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 23,068,449 தொகை செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதியத்திலிருந்து உத்தியோகத்தர்களுக்கு ரூபா 23,392,357 செலுத்தப்பட்டிருந்தது. உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட சில செயற்பாடுகள் அபராதம் விதிக்கக் கூடிய சுங்க புலனாய்வு அல்லாத சந்தர்ப்பங்களின் போதும் உரிய உத்தியோகத்தர்களுக்கு வெகுமதியான கொடுப்பனவிற்காக இந் நிதியத்தை பயன்படுத்தியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

1996 ஆம் ஆண்டிலிருந்து 2002 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் இலங்கை சுங்கத்தினால் பேணிச் செல்லப்பட்டிருந்த ரூபா 109,400,000 பெறுமதியான பிணை முறி பொறுப்பொன்றை 2014 சனவரி மாதமளவிலும் இலங்கை சுங்கத்தினால் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், பின்னர் மேற்கொண்ட சுங்க புலனாய்வின் பின்னர் ரூபா 57,736,913 பணம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் இலங்கை சுங்கத்திற்கு செலுத்தப்பட்டிருந்ததுடன், அத்தொகையில் ரூபா 28,868,456 தொகை இலங்கை சுங்கத்தினால் சுங்க உத்தியோகத்தர்களுக்கு வெகுமதியாக செலுத்தப்பட்டிருந்தது.

அரச நிறுவனமொன்றான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து அறவிட வேண்டிய பிணை முறி தொகையில் ஒரு பகுதியை அறவிட்டு உத்தியோகத்தர்களுக்கு வெகுமதியாக கொடுப்பனவு செய்தமை சர்ச்சைக்குரிய விடயமொன்றாக இருந்ததுடன் உரிய தொகையை அறவீடு செய்தல் இலங்கை சுங்கத்தின் பொறுப்பொன்றாக அவதானிக்கப்பட்டது. அவ்வாறே இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் இலங்கை சுங்கத்திற்கு செலுத்தப்பட்டிருந்த இப் பணம் திறைசேரியால் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு மீளளிப்புச் செய்வதற்கு இணங்கியுள்ளமை ஆவணங்களின் பிரகாரம் மேலும் அவதானிக்கப்பட்டது. மேலும் மொத்த பிணை முறியான ரூபா 109,400,000 தொகையில் விடுபட்டிருந்த ரூபா 51,663,087 ஆன பிணை முறித் தொகை தொடர்பாக இலங்கை சுங்கத்தினால் முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக அவதானிக்கப்படவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2006 திசெம்பர் 22 ஆம் திகதிய பிஎவ்/423 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 4.3 ஆம் பிரிவின் பிரகாரம், நிதியத்தின் வருடாந்த மற்றும் நிதிக் கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 02 மாதங்களுக்குள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மே 05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுக்கிடையே 40 முதல் 144 சதவீதம் வரையான விலகல் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டு கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது சுங்க பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) வெகுமதி கொடுப்பனவு | | வெகுமதி கொடுப்பனவிற்காக உரிய கோவைகள் கணக்குப் பிரிவிற்கு கிடைக்கப் பெற்ற காலப்பகுதி மற்றும் உரிய வெகுமதி பட்டியலுக்காக பணம் கிடைக்கப் பெற்ற திகதி போன்றவை குறிப்பிடப்பட்ட பதிவேடொன்று கணக்குப் பிரிவில் பேணப்படாத காரணத்தினால் வெகுமதி கொடுப்பனவு செயற்பாடு முறையற்று காணப்பட்டன. |
| (ஆ) வெகுமதி கணிப்பீடு செய்தல் | | வெகுமதி தொகையை கணிப்பிடும் போது அரசின் வரி வருமானம் பாதுகாக்கப்படும் வகையிலும், சுங்க வரி மோசடிகளில் கட்டுப்பாடொன்று ஏற்படும் வகையிலும் சுங்க வரி மோசடிகளில் ஈடுபடும் தரப்பினருக்கு ஆகக் கூடிய பாதகமொன்று ஏற்படக் கூடிய வகையில் நடைமுறை ரீதியான கணிப்பிடும் நடைமுறையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |
| (இ) கணக்கீடு | - | முறையான கணக்கீடு முறையொன்று பேணப்படாதிருந்ததுடன் பரீட்சை மீதியொன்று தயாரிக்கப்படாமல் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. |
| | - | செலவினங்கள் குறிப்பாக இனங்காணப்பட்டு வகைப்படுத்தப்படாதிருந்தமை. |